பக்கங்கள்: 06

காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 27 சனிக்கிழமை 12.12.2020 கதிர் 267

## இலங்கை – இந்திய மீனவர் பேச்சுக்கு திகதிகள் குறிப்பு

இலங்கை - இந்திய மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில், இரு நாடுகளுக்கிடையேயான துறைசார் பேச்சுகள் எதிர்வரும் 22 மற்றும் 30ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதுடன்,

2

# வவுனியா சாளம்பைக்குளம் கிராமம் முடக்கம்; அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலில்!

வவுனியா புதிய சாளம்பைக்குளம் கிராமம் இன்றிலிருந்து 14 நாள்களுக்கு முடக்கப்பட்டுள்ளது.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த தாயும் பிள்ளையும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் வவுனியாவிருந்து கொழும்பு சென்று வந்த நிலையில் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவு நேற்று வெளியாகியது. தாய்க்கும் பிள்ளைக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதையடுத்து மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு கொரோனாத் தொற்றிலிருந்து மக்களைக் காப்பாற்றும் முகமாகபுதியசாளம்பைக்குளம்கிராமம்இன்று சுகாதாரப் பிரிவினரால் முடக்கப்பட்டு அப்பகுதி மக்கள் அனைவரும்

2

# மருதனார்மடம் பொதுச்சந்தையை மூடுவதா? உடுவிலை முடக்குவதா?




### இன்றிரவு வெளியாகவுள்ள பி.சி.ஆர். பரிசோதனை பெறுபேற்றின்படியே முடிவு என்கிறார் கேதீஸ்வரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெம்பர் 12

இன்றிரவு வெளியாகும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவின்படியே மருதனார்மடம் பொதுச்சந்தையை மூடுவதா? அல்லது உடுவில் பகுதியை முடக்குவதா? எனத் தீர்மானிக்கப்படும்.

- இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

2

# பண்டிகை காலங்களில் கடுமையான கட்டுப்பாடு

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



இலங்கையில் எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னரான காலப் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுமாயின், கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட பண்டிகைக் காலங்களில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய

2

## முஸ்லிம்களின் ஜனாஸாக்களை ஏற்றுப் புதைக்க மாலைதீவு தயார்?

இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழப்போரில் முஸ்லிம்களின் ஜனாஸாக்ககளை அடக்கம் செய்ய மாலைதீவு அரசாங்கம் சம்மதம் தெரிவித்திருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளினை மாலைதீவு அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாக ஊடகமொன்றை மேற்கோள் காட்டி மற்றொரு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதால் முஸ்லிம்

2

## சிறையிலுள்ள மரணதண்டனை கைதி வாஸ் குணவர்தனவுக்கும் கொரோனா



கொலைச் சம்பவமொன்றில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதுஎனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனாத் தொற்று

2

## 23 ஆயிரத்து 304 பேர் தொற்றிலிருந்து மீண்டனர்

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்றுவருபவர்களில் மேலும் 473 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

2

## 8 கர்ப்பிணிகளுக்கு கொரோனோ

களுத்தறை - அட்டுலுகம பகுதியில் உள்ள 80 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நேற்று கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் 8 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார ஆய்வாளர்கள்

2

## ஹெல உறுமயவிலிருந்து விடைபெற்றார் சம்பிக்க!!




ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும் கட்சி உறுப்பினர் பதவியிலிருந்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இன்று விலகியுள்ளார்.

இலங்கை மன்றத்தில் நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் விசேட பிரதிநிதிகள் கூட்டத்தில் அவர் இந்தத் தீர்மானத்தை அறிவித்தார்.

2

## மோப்ப நாய்கள் சகிதம் செம்மணியில் தேடுதல்!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,டிச.12

யாழ்ப்பாண நகருக்குள் பிரவேசிக்கும் பிற மாவட்ட பஸ்கள் இன்றைய தினம் செம்மணிச் சந்தியில் மோப்ப நாய் சகிதம் தேடுதலிற்கு உட்படுத்தப்பட்டன.

யாழ். நகரின் ஆரம்ப பகுதியான செம்மணிப் பகுதியில் ஏ9 வீதியில் தேடுதலில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வாகனங்கள் அனைத்தையும் சோதனைக்கு உட்படுத்தினர்.

2

# ‘புரெவி’ புயலால் கடலில் உயிரிழந்த செல்வக்குமாரின் குடும்பம் நிர்க்கதி

### உதவிக்கரம் நீட்டுவோர் முன்வருமாறு வேண்டுகோள்



(எஸ்.நிதர்ஷன்)

சுழிபுரம் - பெரியபுலோவில் இருந்து புரெவி புயல் வீசிய தினமன்று பொன்னாலைக் கடலில் தொழிலுக்குச் சென்றபோது அலையில் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழந்த செல்வராசா செல்வக்குமாரின் குடும்பம் தற்போது எந்தவித உதவியும் இன்றி நிர்க்கதிக்குள்ளாகியுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் எல்லைக்குள், ஜே - 172 கிராம சேவையாளர் பிரிவில் இவர்கள் வசிக்கின்றனர்.

2



காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## சிறையிலுள்ள மரணதண்டனை கைதி .................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரபல தொழில் அதிபர் மொஹமட் சியாம் கொலைச் சம்பவத்தில் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தனவுக்கு 2015ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்திருந்தது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான அவரை வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனச் சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேநேரம், வாஸ் குணவர்தனவுக்கு எதிராகச் சோடிக்கப்பட்ட ஆதாரங்களைத் தயார் செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவும் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மோப்ப நாய்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம் பஸ்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இ.போ.சபை மற்றும் தனியார் பஸ்களில் பயணித்தவர்கள் வீதியில் இறக்கப்பட்டமையோடு மோப்ப நாய் சகிதம் பொலிஸார் நீண்ட நேரம் தேடுதலில் ஈடுபட்டனர்.

நீண்ட காலத்தின் பின்னர் இவ்வாறு மோப்ப நாய்கள் சகிதம் தேடுதலில் ஈடுபட்டபோதிலும் தேடுதலிற்கான காரணம் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. சந்தேகத்திற்கு இடமான பொருள் ஏதும் கைப்பற்றப்பட்டதாகவும் அறிவிக்கப்படவில்லை.

## ‘புரெவி’ புயலால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களுக்கு வசிப்பதற்கு வீடு இல்லை. சிறிய கொட்டகை ஒன்றில் 3 குடும்பங்கள் வசிக்கின்றனர்.

உயிரிழந்த செல்வக்குமாரின் வயதான தாய் தந்தை, செல்வக்குமாரின் சகோதரியும் இரு பிள்ளைகளும் (இவர் கணவனால் கைவிடப்பட்டவர், மூத்த மகன் ஊனமுற்றவர்) மற்றும் இவர்களோடு செல்வக்குமாரின் மனைவியும் நான்கு பிள்ளைகளும் பெரும் கஷ்டத்தின் மத்தியில் அக்குடிசையில் வசிக்கின்றனர்.

செல்வக்குமாரின் நான்கு பிள்ளைகளும் கல்வி கற்கின்றனர். மூத்த மகள் இம்முறை ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளார். மூவர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும், ஒருவர் திருவடிநிலை சைவத்தமிழ் கலவன் பாடசாலையிலும் கற்கின்றனர்.

செல்வக்குமாரின் உழைப்புடன், குடும்பத்தில் உள்ள பெண்கள் அவ்வப்போது வயல்களில் கூலி வேலைக்குச் சென்று அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தனர். இப்போது அவர் மரணமடைந்தமையால் எந்தவித வருமான மார்க்கமும் இன்றி தவிக்கின்றனர். சமுர்த்தி உதவித் திட்டத்திலும் இவர்கள் உள்வாங்கப்படவில்லை.

பிள்ளைகள் நால்வரும் நடந்து பாடசாலைக்குச் செல்கின்றனர். ஒரு சைக்கிள்கூட இவர்களிடம் இல்லை. பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். பிரத்தியேக வகுப்புகளுக்கு இதுவரை சென்றதில்லை.

இந்தக் குடும்பத்துக்குக் காணி ஒன்றை வாங்கி அதில் ஒரு கொட்டகை அமைத்துக் கொடுத்தால் எதிர்காலத்தில் அரச வீட்டுத்திட்டம் கிடைக்கும் எனவும் ஊரில் உள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுழிபுரத்தில் இவர்களின் உறவினர் ஒருவரின் வீட்டுக்கு அருகே இரு பரப்பு காணி உள்ளது எனவும், அதை வாங்கிக் கொடுத்தால் குறித்த உறவினரின் பராமரிப்பில் இவர்கள் இருப்பார்கள் எனவும் ஊர் மக்கள் கூறினர்.

எனினும், குறித்த காணி 15 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது எனவும், அதை வாங்குவதற்கு கஷ்டமாக உள்ளது எனவும் ஊரவர்கள் தெரிவிக்கின்றனர். பலர் இணைந்தால் அதைச் செயற்படுத்த முடியும் எனவும் கூறுகின்றனர்.

தாயகத்திலும் புலம்பெயர் தேசத்திலும் வசிக்கும் கொடையாளர்கள் இந்தக் குடும்பத்திற்கு உதவிக்கரம் நீட்டுமாறு கோரப்படுகின்றது.

## பண்டிகை காலங்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவை ஏற்படும் என்று கொரோனாத் தடுப்பு செயலணி தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலங்களில் கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் தடுக்கும் வகையில், பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய 10 அம்சங்கள் அடங்கிய ஆலோசனைகளை அண்மையில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

குறித்த சுகாதார ஆலோசனைகளை பின்பற்றி செயற்பட்டால், இதற்கு மேலதிகமான கட்டுப்பாடுகள் விதிக்கப்படாது என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

வத்தளை, கொழும்பு, நீர்கொழும்பு போன்ற பகுதிகளிலேயே அதிகமாக கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அந்தப் பிரதேசங்களில் அதிகமான கிறிஸ்தவர்கள் செறிந்து வாழ்வதால், பண்டிகைக் காலங்களில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக தமிழ் மக்கள் சித்திரைப் புத்தாண்டை வீடுகளிலேயே கொண்டாடியதைப் போன்று கிறிஸ்மஸ் பண்டிகையையும் கிறிஸ்தவர்கள் வீடுகளோடு மட்டுப்படுத்திக்கொள்வதே சிறந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேவாலயங்களில் கிறிஸ்மஸ் பண்டிகை ஆராதனைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டால், குழுக்களாகப் பங்கேற்பதைத் தவிர்க்குமாறும், குடும்பத்திற்கு ஒருவர் ஆராதனைகளில் கலந்துகொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மருதனார்மடம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் நேற்று மூவர் கொரோனா வைரஸ் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் வவுனியாவைச் சேர்ந்தவர்களாவர். ஒருவர் உடுவில் பிரதேச செயலகத்துக்கு அண்மையில் வசித்து வருபவர்.

மருதனார்மடத்தில் நேற்று எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே உடுவில் பகுதியைச் சேர்ந்த நபருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர் மருதனார்மடம் பொதுச்சந்தையில் மரக்கறி கடை ஒன்றை வைத்திருக்கின்றார். அத்துடன் ஓட்டோ சாரதியாகவும் செயற்படுகின்றார்.

அவரது ஓட்டோவில் பயணித்தவர்கள் மற்றும் அவருடைய கடைக்குச் சென்று பொருள்களை வாங்கிவர்கள் தாமாக முன்வந்து தங்களை உடுவில் சுகாதாரப் பிரிவினரிடம் பதிவு செய்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் அப்பகுதி சுகாதாரப் பரிசோதகர், பொதுச்சுகாதாரப் பரிசோதகரிடம் தங்களுடைய விவரங்களைப் பதிவு செய்வதன் மூலம் பி.சி.ஆர். பரிசோதனையை மேற்கொள்ள முடியும்.

இன்று 350 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தப் பரிசோதனை முடிவுகள் இன்றிரவு வெளியாகவுள்ளன. அந்த முடிவுகளின் அடிப்படையில் மருதனார்மடம் பொதுச் சந்தையை மூடுவதா அல்லது உடுவில் பகுதியை முடக்குவதா எனத் தீர்மானிக்கப்படும். - என்றார்.

## வவுனியா சாளம்பைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்ட அக்கிராமத்தைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட மக்களிடம் சுகாதாரப் பிரிவினர் இன்று பி.சி.ஆர். பரிசோதனையும் மேற்கொண்டனர்.

புதிய சாலம்பைக்குளம் கிராமத்தைச் சேர்ந்த 28 வயதுடைய தாயும் அவரது 5 வயதுடைய மகளுமே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களாவர்கள். அவர்களை தொற்று சிகிச்சை நிலையத்துக்கு மாற்றுவதற்குரிய நடவடிக்கையை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (100)

## இலங்கை - இந்திய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தடைசெய்யப்பட்ட இழுவை வலைகளைப் பயன்படுத்தி, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் எனவும், இதனால் கடல் வளங்கள் அழிவடைவதுடன் தமது வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது எனவும் இலங்கை மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்தநிலையில், கடந்த வருடம் நவம்பர் மாதம் கடற்றொழில் மற்றும் நீர் வள மூலங்கள் அமைச்சராகப் பொறுப்பேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்தவகையில், இலங்கையின் கடல் வளங்கள் மற்றும் கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படுகின்ற அதேவேளை, இந்தியக் கடற்றொழிலாளர்களும் வாழ்வாதாரத்தை இழக்கக்கூடாது என்ற அடிப்படையிலான புதிய பொறிமுறையில் பேச்சுகள் இடம்பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட கடற்தொழில் அமைச்சர், குறித்த திட்ட வரைபை இந்தியப் பிரதமரிடம் கையளித்திருந்தார்.

குறித்த திட்டம் தொடர்பாக இந்தியத் தரப்பினரால் திருப்தி தெரிவிக்கப்பட்டதுடன், கடந்த 2016, 2018 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நடைபெற்ற இரு நாடுகளுக்குமிடையிலான பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கொரோனாத் தொற்று பரவல் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுகள் தாமதமாகி வந்த நிலையில், எதிர்வரும் 22 மற்றும் 30ஆம் திகதிகளில் பேச்சுகள் காணொளி ஊடாக ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹெல உறுமயவி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காகக் கட்சியிலிருந்து நீங்குகின்றார் என்று பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய செயற்குழு உறுப்பினர்களும் தமது பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

கருணாரத்ன பரணவிதான, நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, அநுருத்த பிரதீப், மற்றும் நிரோா அத்துகோரள ஆகியோர் கட்சியின் செயற்குழுவிலிருந்து விலகியுள்ளனர்.

## 8 கர்ப்பிணிகளுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

மேலும் கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே பல மாவட்டங்களில் கொரோனா நோய்த்தொற்றுகள் பதிவாகி வருகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

## முஸ்லிம்களின் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களிடையே கடும் எதிர்ப்புக்கள் காணப்படுகின்றன.

இதனால் முஸ்லிம் மக்கள் பலரும் கொரோனா பரிசோதனையை நடத்த முன்வரவில்லை.

மேற்படி பிரச்சினைகளுக்கு தீர்வாக இலங்கை அரசாங்கம், மாலைதீவிடம் கோரிக்கை முன்வைத்திருந்த நிலையில் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அந்நாட்டு அரசு சம்மதம் தெரிவித்திருப்பதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 23 ஆயிரத்து 304 பேர் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 23 ஆயிரத்து 304 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 7 ஆயிரத்து 924 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் 147 பேர் உயிரிழந்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஹிட்லரும் கோட்டாபயவும்

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜேர்மனியின் சர்வாதிகாரியான அடொல்வ் ஹிட்லர் பாணியில் பயணிக்கின்றார் என்பதுதான் அக்கூற்று.

வெளிப்படையாகப் பார்த்தால், ஜனாதிபதி கோட்டாபயவின் சர்வாதிகாரப் போக்கை விமர்சிக்கும் அரசியல் விமர்சனமாக இது பட்டாலும் கூட இந்தக் கூற்றுக்குள் பகுத்தாய வேண்டிய அர்த்தங்கள் ஆயிரம் இருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டிய விடயம் சிலதான்.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பது மிக முக்கிய நிறுவனம். பாதிக்கப்படும் மக்களுக்கு பக்கச் சார்பின்றிச் செயற்பட்டு நீதி வழங்கும் சுயாதீன நிறுவனம். அதற்கு மனித உரிமை விவகாரங்களில் பரிச்சயம் உள்ள நிபுணர்களே நியமிக்கப்பட வேண்டும். ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அந்த அமைப்பின் தலைவராக ஜகத் பாலசூரிய என்ற மொட்டுக் கட்சிப் பிரமுகரை நியமித்திருக்கின்றார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது அமைச்சராகப் பதவி வகித்தவர் பாலசூரிய. பின்னர் ஆளுநராக இருந்தவர். 'மொட்டு' கட்சியின் கேகாலை மாவட்ட அமைப்பாளர். அவரின் மனைவி ஆளுநராகப் பதவி வகிக்கின்றார். மகன் தாரக பாலசூரிய, தற்போதைய அரசில் இராஜாங்க அமைச்சர். இப்படி மொட்டுக் கட்சியில் முழுமையாக ஊறியவரை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக நியமித்ததன் மூலம் அந்த அமைப்பின் சுயாதீனத்தையே கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்பதே முஜிபுர் ரஹ்மானின் குற்றச்சாட்டு.

இப்படியான எதேச்சதிகாரமான நியமனங்கள் மூலம் ஹிட்லர் போன்ற சர்வாதிகாரியாகி விட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்பது அவரது கருத்து.

ஆனால், அது மட்டுமல்ல, அதையும் தாண்டி ஜனாதிபதி கோட்டாபய, அடொல்வ் ஹிட்லர் இடையே சில ஒற்றுமைகள் உண்டு. அவை இந்தச் சமயத்தில் நோக்கத்தக்கவை; நோக்கப்பட வேண்டியவை.

இருவருமே இராணுவத்தில் இருந்து நாட்டின் தலைமைக்கு வந்தவர்கள். இராணுவப் பாணியில் நாட்டை நிர்வகிக்கும் எண்ணம் கொண்டவர்கள்.

இருவருமே அசைவ உணவை விரும்பாதவர்கள். மதுவை நாடாதவர்கள்.

ஆஸ்திரியாவில் பிறந்த ஹிட்லருக்கு ஜேர்மன் தேர்தலில் நிற்பதற்கான பிரஜாவுரிமை கிடைப்பதில் நெருக்கடி இருந்தது. ஜேர்மன் மாநில அரசு ஒன்றில் சிற்றூழியர் நியமனம் பெற்று அதன் மூலமே ஜேர்மன் பிரஜாவுரிமையை அவர் சுவீகரித்துக் கொண்டார்.

அதேபோல, கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இலங்கையின் தனிப் பிரஜாவுரிமையை உறுதிப்படுத்துவதற்கு கோட்டாபய ராஜபக்ஷ செய்த கருமங்கள் நாடாறிந்தவை.

ஹிட்லரும் ஜேர்மனியின் சான்ஸிலராக வந்ததும் தனக்குக் கட்டுமட்டில்லாத அதிகாரத்தை சுவீகரிக்கும் சட்ட மூலத்தை ஜேர்மன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற வைத்து, சர்வாதிகாரியானார்.

அது போல, கோட்டாபய ராஜபக்ஷவும் தாம் ஜனாதிபதியானதும் இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றச் செய்தமை மூலம் தம்மை அளவு கணக்கற்ற நிறைவேற்றதிகாரம் கொண்டவராக மாற்றிக் கொண்டார்.

இனி ஹிட்லரைப் போல தன் சர்வாதிகாரத்தை – எதேச்சதிகாரத்தை – அவர் வெளிக்காட்டுவதுதான் மிச்சம்.

இன்னொரு முக்கிய விடயமும் உண்டு. அது இனவெறித் தீவிரப் போக்கு.

வலுவாகவும், வசதியாகவும் இருந்த யூதர்களை அழித்தொழிப்பதே நாஜிகளின் கொள்கை என்று கருதி மிக மோசமாகச் செயற்பட்ட அதிதீவிரவாதி ஹிட்லர். அதனால்தான் பிற்காலத்தில் தனது தேச மக்களாலேயே வெறுத்தொதுக்கப்படும் நிலைமை ஹிட்லருக்கு ஏற்பட்டது. வரலாற்றில் மிக மோசமான கொடூர சர்வாதிகாரி என்ற நிரந்தர அவப் பெயரை ஹிட்லர் சம்பாதிக்க வேண்டி வந்தது.

அதேபோன்று பௌத்த, சிங்களத் தீவிர இனவெறிப் போக்கில் உறுதியாக நிற்பவர்தான் கோட்டாபய ராஜபக்ஷ. முஸ்லிம், தமிழ் வர்த்தக சாம்ராச்சியங்களைத் தகர்த்து குட்டிச்சுவராக்குவதில் தொடங்கி, மாற்று இனங்களை அடிமைப்படுத்தி, அடக்கி, ஒடுக்கும் விவகாரம் வரை பல விடயங்களில் ஹிட்லரை முறியடிக்கும் அதிதீவிர சர்வாதிகார போல வெளிப்பட்டு வருகின்றார் கோட்டாபய ராஜபக்ஷ.

நாட்டில் பல்வேறு அரச கட்டமைப்புகளின் தனித்துவத்தையும், நடுநிலைச் செயற்பாட்டையும் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்துபவை சுயாதீன ஆணைக்குழுக்கள். அவற்றுக்கு இப்போது கட்சிக்காரர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அதன் மூலம், முழு அரச இயந்திரத்தையுமே கட்சிக் கட்டமைப்பாக மாற்றும் அடாவடித்தன அரச நிர்வாகத்தை முன்னெடுக்கின்றார் கோட்டாபய. முழு அளவில் தம்மை ஹிட்லராக்கும் அவரின் செயற்பாடுகளின் ஆரம்பமே இந்த நடவடிக்கைகள். அவற்றை ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் சரியாக முற்கூட்டியே அடையாளம் கண்டுள்ளனர்.

## மூன்றிலிரண்டு பெரும்பான்மை நீடிக்காது: மஹிந்த போல் கோட்டாபயவும் கவிழ்வார்!

### ஹேரா விதானகே எம்.பி. சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ.12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீதான நம்பிக்கையை நாட்டு மக்கள் இழந்துள்ளனர். மஹிந்தவுக்கு ஏற்பட்ட நிலைமையே கோட்டாபயவுக்கும் ஏற்படும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேரா விதானகே சுட்டிக்காட்டினார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் 1946ஆம் ஆண்டு உதயமான ஐக்கிய தேசியக் கட்சி, 1951ஆம் ஆண்டு உருவான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவை இன்று நாட்டு மக்களின் மனங்களில் இருந்து நீங்கிவிட்டன. மக்கள் மாறவில்லை. ஆனால், மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது.

புதியதொரு அரசியல் கட்சியே தற்போது நாட்டை ஆள்கின்றது. பிரதான எதிர்க்கட்சியாக இருப்பதும் புதிய கட்சியே. ஆனால், மொட்டு அரசுக்கு தற்போது இருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் எதிர்காலத்தில் இருக்குமா என்பதைக் கூற முடியாது. மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்கவே முடியாது என்றனர். 2015 இல் என்ன நடந்தது?

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியானபோது நாட்டு மக்கள் மத்தியில் நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கை இன்று இல்லாமல் போயுள்ளது. ஊழல்கள் இடம்பெற ஆரம்பித்துள்ளன. புதிதாக இரண்டு அமைச்சுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அந்த அமைச்சுக்களுக்கு நிதி கூட ஒதுக்கப்படவில்லை. எனவே, நாடு குறித்து சிந்திக்காமல் அரசியல் ரீதியிலேயே முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பொருளாதார தடைகளும் மறைக்கப்படுகின்றன – என்றார்.

## சிறுவணிக முயற்சி உதவித்திட்டத்தை இலங்கையில் ஆரம்பித்தது அமெரிக்கா!

இலங்கையிலுள்ள சிறுவணிக முயற்சிகளுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா உதவித் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டம், இலங்கை மதிப்பில் 3.6 பில்லியன் ரூபா பெறுமதியிலானது என இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகத்தால் நிதியளிக்கப்படும் இந்த செயற்திட்டத்தின் ஊடாக சிறுவணிக முயற்சிகளுக்கு அவசியமான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதனூடாக, ஏற்கனவே கொரோனா வைரஸ் பரவலால் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கும் புதிய சிறுவணிக முயற்சிகள் உருவாக்கப்படுவதற்கும் தொழிற்படையில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்படுவதற்கும் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நிலைபேறான பொருளாதார வளர்ச்சியில் தனியார் துறையினரின் பங்களிப்பை வலுப்படுத்துதல் மற்றும் வணிகங்களின் இலாபத்தை அதிகரித்தல் ஆகியவற்றுக்குப் பங்களிப்புச் செய்வதற்கான கடப்பாடு, அமெரிக்காவின் இந்தச் செயற்திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படும் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் யானையின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது!

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இறம்பைக்குளம் பகுதியில் மர்மமான முறையில் காட்டு யானையொன்று உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள காணி ஒன்றில் யானையின் சடலம் இருப்பதை அவதானித்த காணியின் உரிமையாளர் ஓமந்தை பொலிஸாருக்குத் தகவலை தெரியப்படுத்தியிருந்தார்.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் யானையின் சடலத்தைப் பார்வையிட்டதுடன், விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



குறித்த சடலம் துர்நாற்றம் வீசுவதால் பல நாள்களுக்கு முன்னரே இறந்திருக்கலாம் என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

## 884 பேர் நாட்டுக்குத் திரும்பினர்

கடந்த 24 மணிநேரத்தில் வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 884 பயணிகள் நாடு திரும்பியுள்ளனர்.

பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்நிமித்தம் வெளிநாடு சென்றிருந்த இலங்கையர்கள் இவ்வாறு நாடுதிரும்பியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

இதன்படி தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றிருந்த நிலையில் நிர்க்கதிக்குள்ளான இலங்கையர்கள் 570 பேர் விசேட விமானங்களில் நாடுதிரும்பியுள்ளனர்.

இதேவேளை, நாடு திரும்பியுள்ள அனைவரும் விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு சுற்றுலா ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காலியில் 7 கிராமத்திற்கு பயணத் தடை விதிப்பு!

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக காலி மாவட்டத்தில் 7 கிராமங்களுக்கு கடுமையான பயணத்தடை விதிக்க சுகாதார பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்தப் பகுதியில் 25 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்தே இவ்வாறு பயணத்தடை விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக காலி மாவட்ட தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் வெனுர கே.சிங்காரச்சி தெரிவித்துள்ளார்.

இதன்படி மிலித்துவ, கோன்கஹ, தலாபிடிய, தங்கெதர கிழக்கு, தெத்துகொட வடக்கு, தெத்துகொட தெற்கு மற்றும் மகுலுவ ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கே இந்த பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே, இந்தப் பகுதிகளில் வசிப்பவர் கள் அனைவரும் மறு அறிவித்தல் வரை அத்தியாவசியமற்ற காரணத்துக்காக வீட்டில் இருந்து வெளியேற முடியாது என வைத்தியர் வெனுர கே.சிங்காரச்சி கூறியுள்ளார்.

# இந்தியாவில் துணிச்சலை விதைத்தவர் பாரதியார்!

தமிழ் மொழியும், தாய்நாடும் இரு கண்கள் என நினைத்தவர் பாரதியார் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மகாகவி பாரதியாரின் 138 ஆவது பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்ட நிலையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பாரதியின் புகைப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிலையில், பாரதியாரின் பிறந்தநாளையொட்டி சர்வதேச பாரதி விழா நேற்று நடைபெற்றது.

இந்த விழாவில் பிரதமர் நரேந்திரமோடி,தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டோர் காணொலி தொடர்பாடல் மூலம் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது உரையாற்றிய பிரதமர் மோடி, பாரதியாரின் எழுச்சியை இன்றைய இந்தியாவில் தான் பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், துணிச்சலாக செயற்பட்ட மகாகவி பாரதி பழைமை மற்றும் புதுமையை இணைத்து இந்தியாவை உருவாக்க எண்ணினார் என்று அவர் கூறியுள்ளார்.

மேலும், தமிழ் மொழியும், தாய்நாடும் இரண்டு கண்கள் என நினைத்த பாரதி, பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களின் முன்னேற்றம் தொடர்பில் பேசினார் என பிரதமர் மோடி குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பாரதியாரின் புத்தகங்களை நாடு முழுவதும் படிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்



# நடிகர் ரஜினிக்கு மோடி பிறந்தநாள் வாழ்த்து!



நடிகர் ரஜினிகாந்த், தனது 70 ஆவது பிறந்த நாளை இன்று (சனிக்கிழமை) கொண்டாடி வருகின்றார்.

இந்நிலையில் அவரது பிறந்தநாளை, ரசிகர்களும் பலவிதமான முறையில் கொண்டாடி வருகின்றமையை சமூக வலைத்தளங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாறு பிறந்தநாளை கொண்டாடிக்கொண்டிருக்கும் ரஜினிகாந்துக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி, தனது ருவிட்டர் பக்கத்திலேயே ரஜினிகாந்துக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குறித்த ருவிட்டர் பதிவில் அவர், 'அன்பான ரஜினிகாந்துக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.

நீண்ட ஆரோக்கியமான வாழ்வை ரஜினிகாந்த் பெற வேண்டும்' எனக் கூறியுள்ளார்.

இதேவேளை ரஜினிகாந்துக்கு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் உள்ளிட்டோரும் வாழ்த்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா பாதிப்பு 98 லட்சம் கடந்தது!

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 98 லட்சத்தைக் கடந்துள்ள நிலையில், 93 லட்சத்து 24 ஆயிரம் பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இன்று (சனிக்கிழமை) காலை, மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 98 லட்சத்தைக் கடந்துள்ளது. இதற்கமைய மொத்த பாதிப்பு 98 லட்சத்து 26 ஆயிரத்து 775 ஆக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை கடந்த 24 மணி நேரத்தில் 30 ஆயிரத்து 5 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஒரே நாளில் 442 பேர் உயிரிழந்துள்ளனர். இதனூடாக கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 42 ஆயிரத்து 628 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 93 லட்சத்து 24 ஆயிரத்து 328 ஆக உயர்ந்துள்ளது.

அந்தவகையில் நேற்று மாத்திரம் 33 ஆயிரம் 494 பேர் குணமடைந்துள்ளனர். புதிய பாதிப்புகளை விட குணமடைந்தவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் 3 லட்சத்து 59 ஆயிரத்து 819 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழப்பு 1.45 சதவீதமாக உள்ளது. குணமடையும் விகிதம் 94.89 சதவீதமாக உயர்ந்துள்ளது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டு பெண் தீவிரவாதிகள் பொலிஸாரால் சுட்டுக் கொலை!

மத்திய பிரதேசத்தில் நக்சல் தடுப்புப் பிரிவு பொலிஸார் நடத்திய தாக்குதலில் 2 பெண் தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மத்திய பிரதேச மாநிலம் பாலாகட் மாவட்டத்திலுள்ள போர்வன் காட்டுப்பகுதியில்தீவிரவாதிகள் பதுங்கி இருக்கின்றனர் எனப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து கிர்னாபூர் சரக பொலிஸ்துறை மற்றும் நக்சல் தடுப்பு பிரிவு பொலிஸார் இணைந்து குறித்த பகுதியில் நேற்று (வெள்ளிக்கிழமை) இரவு முதல் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் துப்பாக்கிச் சண்டை வெடித்தது. அதிகாலை 12.30 மணியளவில் ஒரு தீவிரவாதி பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதனைத் தொடர்ந்தும் துப்பாக்கிச் சண்டை நீடித்தது.




அதில் இன்னொரு தீவிரவாதியையும் பொலிஸார் சுட்டுக்கொன்றனர்.

இந்த தாக்குதலில் கொல்லப்பட்ட இருவரும் பெண்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், அவர்களிடம் இருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிய பொலிஸார் அந்தப் பகுதியில் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# நடிகர் ரஜினிக்கு சச்சின் பிறந்த நாள் வாழ்த்து!



நடிகர் ரஜினிகாந்த், தனது 70 ஆவது பிறந்தநாளை இன்று (சனிக்கிழமை) கொண்டாடி வருகின்றார்.

மேலும், அவருக்கு ரசிகர்கள் மற்றும் பிரபலங்கள் என பலரும் தங்களது வாழ்த்துக்களைத் தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் பிரபல கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், ரஜினிக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

சச்சின் டெண்டுல்கர், தனது ருவிட்டர் பக்கத்திலேயே நடிகர் ரஜினிகாந்துக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

குறித்த ருவிட்டர் பதிவில், பிறந்த நாள் வாழ்த்துகள் தலைவா. கடவுள், உங்களுக்கு நீண்ட, ஆரோக்கியமான வாழ்வை வழங்கட்டும் என்று சச்சின் டெண்டுல்கர் குறிப்பிட்டுள்ளார்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1977.07.02
மதம் - இந்து V
நட்சத்திரம் - பூராடம்
செவ் - 02இல்
பாவம் - 33 1/2
கல்வி - A/L
தொழில் - சுவிஸ் DoctorPR
எதிர்பார்ப்பு - படித்த பெண்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1989.12.03
மதம் - இந்து V
நட்சத்திரம் - உத்தரம்
பாவம் - 28 3/4
செவ் - 01இல்
கல்வி - BCom பட்டதாரி
தொழில் - வங்கி அதிகாரி
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

# குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

13.12.2020 ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 10 கத்தோலிக்கம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 கத்தோலிக்கம் (2ஆம், 4ஆம்) |
| 06.00 - 06.55 | தரம் - 10 சைவநெறி (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 சைவநெறி (2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 10 வரலாறு (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 வரலாறு (2ஆம், 4ஆம்) |
| 11.00 - 11.55 | தரம் - 10 இஸ்லாம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 இஸ்லாம் (2ஆம், 4ஆம்) |
| 12.00 - 12.55 | தரம் - 03 தமிழ் |
| 12.30 - 12.25 | தரம் - 03 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 13.00 - 13.25 | தரம் - 04 கணிதம் |
| 13.30 - 13.55 | தரம் - 04 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 14.00 - 14.25 | தரம் - 05 கணிதம் (1ஆம், 3ஆம்) மற்றும் ஆங்கிலம் (2ஆம், 4 ஆம் |
| 14.30 - 14.55 | தரம் - 05 தமிழ் (1ஆம், 3ஆம்) மற்றும் சுற்றாடல்சார் செயற்பாடுகள் (2ஆம், 4 ஆம் |
| 18.00 - 18.55 | தரம் - 10 ஆங்கிலம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 ஆங்கிலம் (2ஆம், 4ஆம்) |
| 23.30 - 24.30 | தரம் - 10 கிறிஸ்தவம் (1ஆம், 3ஆம்)<br>தரம் - 11 கிறிஸ்தவம் (2ஆம், 4ஆம்) |

# ஆப்கானில் தொடர் ரொக்கெட் தாக்கு: ஒருவர் உயிரிழப்பு; இருவர் காயம்!

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தொடர்ச்சியான ரொக்கெட் தாக்குதல்களால், ஒருவர் உயிரிழந்தமையோடு, இருவர் காயமடைந்துள்ளனர்.

இன்று (சனிக்கிழமை) அதிகாலை இடம்பெற்ற இந்த தாக்குதல்களை, காபூல் பொலிஸார் உறுதிப்படுத்தினர். தலைநகரின் கிழக்குப் பகுதியில் பெரும்பாலான ரொக்கெட்டுகள் தாக்கின எனப் பொலிஸார் கூறினர்.

மூன்று ரொக்கெட்டுகள் காபூலின் ஹமீத் கர்சாய் சர்வதேச விமான நிலையத்துக்கு அருகிலும், ஏழு குடியிருப்பு பகுதிகளிலும் தரையிறங்கின என உட்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தாரிக் அரியன் செய்தியாளர்களிடம் கூறினார்.

தலைநகரின் வடக்கு விளிம்பில் நிறுத்தப்பட்டிருந்த வாகனத்தில் இருந்து ஏவப்பட்ட ரொக்கெட்டுகள், காபூல் விமான நிலையத்தின் வளாகத்தில் விழுந்தன எனவும் இதன்போது காம் எயார் விமானத்தை சற்று சேதப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காம் எயார், 2003 இல் ஆரம்பித்து உள்நாட்டு மற்றும் சர்வதேச விமான சேவைகளை வழங்குகிறது. இது ஆப்கானிஸ்தானின் முதல் தனியாருக்கு சொந்தமான விமான நிறுவனமாகும்.



காபூலில் ஒரே மாதத்தில் இரண்டாது முறையாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில், இதுவரை எந்த அமைப்பும் இதற்குப் பொறுப்பேற்கவில்லை.

கட்டார் நாட்டில் செப்ரெம்பர் 12ஆம் திகதி முதல் தலிபான்களும் அரசாங்கமும் சமாதானப் பேச்சுகளில் ஈடுபட்டிருந்த போதிலும், காபூலில் பல பயங்கர தாக்குதல்கள் நடந்துள்ள நிலையில், சமீபத்திய மாதங்களில் ஆப்கானிஸ்தான் முழுவதும் வன்முறை அதிகரித்துள்ளது.

# அமெ.யில் கொரோனா சாவு 3 லட்சத்தையும் கடந்தது!

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றால், மொத்தமாக மூன்று லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, அமெரிக்காவில் மூன்று லட்சத்து இரண்டாயிரத்து 750 பேர் உயிரிழந்துள்ளனர்.

உலகளவில் கொவிட் – 19 தொற்றால் அதிக பாதிப்பு மற்றும் உயிரிழப்பை சந்தித்த முதல் நாடாக விளங்கும் அமெரிக்காவில், இதுவரை ஒரு கோடியே 58 லட்சத்து 20 ஆயிரத்து 42 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் வைரஸ் தொற்றால் இரண்டு லட்சத்து 46 ஆயிரத்து 530 பேர் பாதிக்கப்பட்டமையோடு, மூவாயிரத்து 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் வைரஸ் தொற்று பரவியதிலிருந்து பதிவான நாளொன்றுக்கான அதிகப்பட்ச உயிரிழப்பு எண்ணிக்கை இதுவாகும்.

தற்போதுவரை வைரஸ் தொற்றால் 64 லட்சத்து 85 ஆயிரத்து 289 பேர் அங்குள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 27ஆயிரத்து 324பேர் தீவிர சிகிச்சை பிரிவில் உள்ளனர். அத்துடன் இதுவரை 95இலட்சத்து ஏழாயிரத்து 419 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

# பக்ரைனில் அனைத்து மக்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி இலவசம்!

15 லட்சம் மக்கள் தொகை கொண்ட வளைகுடா நாடான பஹ்ரைனில், அனைத்து மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி இலவசம் என அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில்– நாட்டில் உள்ள அனைத்துக் குடிமக்களுக்கும், பிற நாடுகளில் இருந்து வந்து இங்கு வசிப்பவர்களுக்கும் ஒரு பாதுகாப்பான தடுப்பூசி இலவசமாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் மக்களுக்கு எந்தத் தடுப்பூசி போடப்படும் என்பது அந்த செய்தியில் குறிப்பிடப்படவில்லை. மேலும் நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 27 மருத்துவ மையங்களில் நாள் ஒன்றுக்கு 10 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி போட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

பைசர் நிறுவனத்தின் தடுப்பூசிக்கு முன்பாக ஏற்கனவே சீனாவின் சினோபார்ம் நிறுவனம் தயாரித்துள்ள தடுப்பூசியை அவசர தேவைக்கு பயன்படுத்த பஹ்ரைன் அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவால் உலகளவில் சாவு 16 லட்சத்தை கடந்தது!

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) பெருந் தொற்றால், இதுவரை மொத்தமாக 16 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் கொடிய கொரோனா வைரஸ் தொற்றால், ஏழு கோடியே 14 லட்சத்து 33 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர வைரஸ் தொற்றிலிருந்து நான்கு கோடியே 96 லட்சத்து 34 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.


## இலங்கை தமிழ் சங்கம் USA

Thamilar Sangamam - 2020

Worldwide Broadcast : Dec. 12& 13, 2020

YouTube Live Link (Active Dec. 12, 8 am) www.sangam.org

www.sangamEvents.org ( Backup)

| Date (USA) | நிகழ்ச்சி நிரல் | அமெ. கிழக்கு | ஐரோப்பா | இலங்கை/ இந்தியா | தென் ஆபிரிக்கா | மலேசியா |
|---|---|---|---|---|---|---|
| Saturday 2020 - 12 - 12 (USA) | யூ டியூப்/ முகப் புத்தகம் ஆரம்பம் | 8am | 1pm | 6.30pm | 3pm | 9pm |
| | வரவேற்பு நடனம்/ இசை மலேசியா : இயல் இசை நாடகம் | 9am | 2pm | 7.30pm | 4pm | 10pm |
| | சீமான் பேச்சு முன்னோட்டம் நடனம்: 'முத்தைத் தரு பக்தி' உலகளாவிய நிகழ்வு | 10am | 3pm | 8.30pm | 5pm | 11pm |
| | மெல்லிசை கணேஷ் கிருபா - GK பாடகர்கள் அறிமுகப் பிரிவு | 11am | 4pm | 9.30pm | 6pm | 12midn |
| | இசையுடன் ஒரு மணி நேர இடைவேளை | | | | | |
| | உலகளாவிய நிகழ்வுகள் தெ.ஆபிரிக்கா, நோர்வே, பிரான்ஸ்,பிரிட்டன், அமெரிக்கா (TBD) | 2pm | 7pm | 12.30pm | 9pm | 3am |
| | அலைகள் : உலகளாவிய இசை அரங்கில் தமிழ் இசைக் கலைஞர்கள், பேர்ள் | 4pm | 9pm | 2.30am | 11pm | 5am |
| | அமெரிக்க நடனங்களும் தமிழ் பாடசாலைகளும் | 5pm | 10pm | 3.30am | 12midn | 6am |
| | கனடா: நடனம்/ இசை தேர்ந்த கருப்பொருள்களின் மறு ஒலிபரப்பு | 6pm | 11pm | 4.30am | 1am | 7am |
| | புளோரிடா - வயலின் (பாரம்பரியம்) நடனம்: 'தீராத விளையாட்டு' | 8pm | 1am | 6.30am | 3am | 9am |
| | கணேஷ் கிருபாவின் ஈழ. தத்துவப் பாடல்கள் | 9pm | 3am | 7.30am | 5am | 10am |

Saturday Program Ends. Rebroadcast for Asia Viewers
Secretary@sangam.org
Phone: (011) - 732 - 743 - 5468


# எச்.ஐ.விக்கு சாதகமான முடிவினைக் காண்பித்த கொரோனா தடுப்பூசி சோதனை; ஆஸி. அதிர்ச்சி!

ஆஸ்திரேலியாவில் கொரோனா தடுப்பூசி சோதனையின்போது, எச்.ஐ.விக்கு சாதகம் என போலியான முடிவுகள் காண்பித்ததால் பரிசோதனை நிறுத்தப்பட்டுள்ளது.

குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகம் மற்றும் ஆஸ்திரேலிய பயோடெக் நிறுவனமான சி.எஸ்.எல். நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள தடுப்பூசியின் முதற்கட்ட சோதனை 216 பேரிடம் நடத்தப்பட்டது.

இந்த தடுப்பு மருந்தில் பயன்படுத்தப்பட்ட ஆண்டிபாடிஸ், எச்.ஐ.வி. வைரஸ் நோயறிதலில் தோன்றும் விளைவுகளை ஏற்படுத்தியதால் 4 இல் ஒருவருக்கு எச்.ஐ.வி. சாதகம் என போலியான முடிவுகளைக் காட்டியது.

2021 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இந்தத் தடுப்பூசி கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்ட சோதனைகள் உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மோரிசன் வெள்ளிக்கிழமை காலை ஊடக



வியலாளர்களிடம் கூறுகையில், 'இந்த தடுப்பூசி இனி நாட்டின் தடுப்பூசி திட்டத்தின் ஒரு பகுதியாக இடம்பெறாது' எனக் கூறினார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், 'சோதனைக்கு உட்படுத்தப்பட்ட 216 சோதனை பங்கேற்பாளர்களுக்கு எந்தவிதமான மோசமான விளைவுகளும் ஏற்படவில்லை.

எவ்வாறாயினும், தடுப்பூசியால் உருவாக்கப்படும் ஆன்டிபாடிகள் எச்.ஐ.வி. நோயறிதலில் தலையிடுவதாகவும் சில எச்.ஐ.வி. சோதனைகளில் தவறான நேர்மறைக்கு வழிவகுத்ததாகவும் சோதனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மாடர்னா நிறுவனத்திடம் இருந்து 10 கோடி தடுப்பூசிகளை வாங்குகின்றது அமெரிக்கா!




மாடர்னா நிறுவனத்திடம் இருந்து கூடுதலாக 10 கோடி டோஸ்கள் தடுப்பூசி மருந்தை வாங்குவதற்கு அமெரிக்கா அரசாங்கம் ஒப்பந்தம் செய்துள்ளது.

அடுத்த ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 1.65 பில்லியன் டொலர் மதிப்பிலான தடுப்பூசி மருந்துகள் அமெரிக்காவுக்கு விநியோகம் செய்யப்படும் என மாடர்னா நிறுவனம் அறிவித்துள்ளது.

ஜூன் மாத இறுதிக்குள் தொடர்ந்து தடுப்பூசி மருந்தை வழங்கும் என்று அமெரிக்க அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தடுப்பூசியை அவசர பயன்பாட்டுக்கு அனுமதிக்கக் கோரி பைசர் நிறுவனம், அமெரிக்க உணவு மற்றும் மருந்து கட்டுப்பாட்டு அமைப்பிடம் விண்ணப்பித்திருந்த நிலையில், அதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண மாவட்ட வழிபாட்டு இடங்களில் ஒரே தடவையில் 50 பேர் பங்குபற்ற அனுமதி!

## சுகாதார நடைமுறைகளில் தளர்வு யாழ். அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்.மாவட்டத்தில் பேணப்பட்ட சுகாதார நடைமுறைகளில் நேற்று முதல் சில தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என யாழ் மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் -

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போதைய கொரோனா நிலைமையானது கடந்த ஒக்ரோபர், நவம்பர் மற்றும் டிசெம்பரில் இன்றுவரை 26 நபர்கள் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளார்கள்.

அவர்களில் 18 பேர் குணமடைந்து வீடுதிரும்பி இருக்கிறார்கள். இந்த தொற்று உறுதி செய்யப்பட்டவர்களை விட தொற்று உள்ளவர்களுடன்தொடர்புகளைப்பேணிய 874 குடும்பங்களைச் சேர்ந்த 1,905 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் பேணப்பட்டு வந்த சில சுகாதார நடைமுறைகளில் சில தளர்வுகள் மேற்கொள்வதற்கு சுகாதாரப் பகுதியினர் தீர்மானித்துள்ளார்கள்.

கொரோனா கட்டுப்பாட்டு செயலணியும் இதற்கு அனுமதி அளித்துள்ளது. எனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் சில சுகாதார நடைமுறைகளில் தளர்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

அதன்படி வணக்கத் தலங்களில், வழிபாட்டு இடங்களில் ஒரே தடவையில் 50 பேர் கலந்துகொள்வதற்காக இன்றிலிருந்து அனுமதிக்கப்படுவார்கள்.

ஆலயங்களில் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றிக்கொள்கின்றமை அவசியமாகும். அத்தோடு கட்டாயமாக கைகழுவி முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளிகளைப் பேணி ஆலய பூசை வழிபாட்டில் கலந்துகொள்ள வேண்டும். அவ்வாறு பக்தர்கள் உள்ளே செல்லும் போது தங்களுடைய பெயர் விவரங்களைப் பதிவு செய்து ஆலயத்திற்குள்ளே செல்கின்றமை அவசியமாகும்.

ஹோட்டல் மற்றும் திருமண மண்டபங்களில் கூட்டங்கள் கருத்தரங்குகள் செயலமர்வுகள் 50 பேராக மட்டுப்படுத்தி செயற்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேபோல் திருமண மண்டபங்களில் திருமண நிகழ்வுகள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் நடத்த விரும்புபவர்கள் முன்கூட்டியே சுகாதாரப் பகுதியினரிடம் குறித்த அனுமதியை விண்ணப்பித்து அதனைப் பெற்று நடத்த வேண்டும். அங்கேயும் அவர்களுக்குரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயற்படுத்த வேண்டும் கூட்டத்தில் கலந்து கொள்பவர்களுடைய பெயர் விவரங்களும் பதிவு செய்யப்படுதல் அவசியமாகும்.

இந்த நிலைமைக்கு மேலதிகமாக அத்தியாவசிய தேவைகளுக்காக பயணத்தில் ஈடுபடுபவர்கள் அதாவது வெளி மாவட்டங்களுக்குப் பயணிப்போர், அரச உத்தியோகத்தர்கள், தொழில்ரீதியாக வெளி மாவட்டத்துக்கு செல்பவர்களும் சுயதனிமைப்படுத்தலிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவே அத்தியாவசிய சேவைகள் ஈடுபடுவர்கள் மற்றும் தொழில் ரீதியாக அடையாள அட்டையுடன் வெளி மாவட்டங்களுக்குச் சென்று வருபவர்களும் சுயதனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படுகிறார்கள். அவ்வாறானவர்களுக்கு தனிமைப்படுத்தல் நிறுத்தப்பட்டுள்ளது.

தொழில் நிமித்தம் வெளி மாகாணங்களுக்கு சென்று வருபவர்களுக்கும் இந்த நடைமுறை செயற்படுத்தப்படும். அதே நேரத்தில் அதிகூடிய அபாய பிரதேசத்தில் இருந்து வருபவர்கள் அவர்களுடைய நிலைமை தொடர்பாக சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலின் படிசெயற்படலாம்.

தமது விவரங்களைத் தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு தனிமைப்படுத்தல் தேவைய, இல்லையா என்பது தொடர்பில் சுகாதாரப் பிரிவினர் ஆலோசனை வழங்குவார்கள்.

வெளிமாகாணத்திலிருந்து உத்தியோக நிமித்தம், கடமை நிமித்தம் வந்து செல்பவர்களுக்கு தனிமைப்படுத்தல் இல்லை. எனவே, இந்த விடயங்களை அனுசரித்து பொதுமக்களும் உத்தியோகத்தர்களும் ஏனைய அமைப்புகளும் நடந்துகொள்கின்றமை அவசியமாகும்.

விழாக்கள் மற்றும் திருமணம் நிகழ்வுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வழிகாட்டலுக்கமைய வீடுகளிலேயே செயற்படுத்தப்பட வேண்டும். மண்டபங்களிலும் ஆலயங்களிலும் திருமண நிகழ்வுகளை அல்லது ஏனைய நிகழ்வு தற்போது செயற்படுத்த தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமையை அனுசரித்து எதிர்வரும் காலங்களில் இதற்குரிய அனுமதி பரிசீலிக்கப்படும்.

இந்த தீர்மானங்கள் அனைத்தும் தேசிய மட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளவை. அதேபோல் யாழ் மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்களுக்கும் தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே தேசிய கொள்கைக்கு இணாங்க அதற்குரிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். இந்தத் தளர்வுகளை பொதுமக்கள் தகுந்தவாறு பின்பற்றி நடந்து கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டம் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு பொதுமக்களுடைய பங்களிப்பே முக்கியமான காரணமாகும். அத்தோடு சுகாதாரத் திணைக்களம் மற்றும் ஏனைய திணைக்களங்களின் ஒத்துழைப்பும் எமது யாழ். மாவட்டத்தில் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு ஒரு காரணமாகும்.

எனவே, ஒரு சிலர் பொறுப்பற்ற விதத்தில் செயற்படும் போது அது அனைவருக்கும் ஓர் அசௌகரியத்தை ஏற்படுத்தும் விதமாக அமைந்து விடும் எனவே அனைவரும் பொறுப்பாகச் செயற்பட வேண்டும். - எனத் தெரிவித்துள்ளார்.

# மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவது தொடர்பில் தம்மரதன தேரருடன் பிரதமர் சந்திப்பு



கொழும்பு, டிசெ.12

பெல்லன்வில ரஜமஹா விகாரையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வழிபாட்டில் ஈடுபட்டார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) இந்த வழிபாட்டு நிகழ்வுகளில் ஈடுபட்ட பிரதமர், பெல்லன்வில ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வணக்கத் துக்குரிய பெல்லன்வில தம்மரதன தேரரை சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, வணக்கத்திற்குரிய தேரரிடம் நலன் விசாரித்த பிரதமர், கொவிட் - 19 தொற்று நிலைமைக்கு மத்தியிலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் வணக்கத்துக்குரிய தேரருக்கு தெளிவுபடுத்தினார்.

மேலும், நாட்டின் பொருளாதாரம், சமூக மற்றும் அரசியல் செயல்முறைகளுக்கு பொருத்தமான இறையியல் நடைமுறைகள் குறித்து வணக்கத்திற்குரிய தேரர் இதன்போது பிரதமருக்கு அறிவுறுத்தினார்.

# கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய உண்டியல் உடைத்து திருட்டு!



கிளிநொச்சி ஏ-9 வீதியில் அருகிலிருக்கும் கந்தசுவாமி ஆலய உண்டியலின் பூட்டை உடைத்து உண்டியலில் இருந்த தொகைப் பணம் களவாடப்பட்டுள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கந்தசுவாமி ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டமை தொடர்பாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# இரணைமடு நன்னீர் மீனவர்கள் 200 பேர் புயலினால் பாதிப்பு!

கிளிநொச்சியில் 200 இற்கு மேற்பட்ட இரணைமடு நன்னீர் மீனவர்கள், புயலின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற இயற்கை அனர்த்தம் காரணமாக தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கிளிநொச்சி - இரணைமடு குளத்தை நம்பியே 254 மீனவ குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்தை கொண்டு செல்கின்றன. புரெவி புயல் காரணமாக 6 நாள்களுக்கு மேல் தொழிலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் தங்களது குடும்பத்தின் வாழ்வாதாரம் முற்றாகப் பாதிப்படைந்துள்ளது என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை குளத்தில் அதிகளவு அழுக்குகள் கலந்துள்ளமையால், தமது தொழிலை முன்னெடுக்க முடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது எனவும் மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆகவே, இத்தகைய சூழ்நிலையில் தமது பாதிப்புக்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் ஆராய்ந்து, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# முஸ்லிம்களின் உடல் அடக்கம் விவகாரம்: விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தவேண்டும்!

## அரச மருத்துவர் சங்கம் கோரிக்கை

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்பவரின் உடல்களை அடக்கம் செய்கின்றமை தொடர்பாக விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்துவது அத்தியாவசியமானது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த வைத்தியர் ஹரித அலுத்கே இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கொரோனா வைரஸ் தடுப்பு சுகாதார அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி, இயல்பு வாழ்க்கையை கொண்டு செல்வதே தற்போதைய சூழ்நிலையில் மிகவும் அவசியமான ஒன்றாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் உடல்கள் அடக்கம் செய்வதற்குத் தேவையான நடைமுறைகள் தொடர்பாகவும், பிரதமர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.12.2020 இல் வெளியிடப்பெற்றது.